[28th August 1970

திரு. வி. தங்கபாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் குறிப்பாக இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு, மிக அதிகமான பொருத்தமுள்ளதாக இருக்கும். அங்கேதான் ஏராள மான பனை மரங்கள், ஆயிரக்கணக்கான மரங்கள், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் எல்லாம் இருக்கிறார்கள். மேலும் அந்த மாவட்டங்கள் தொழில் வளம் இல்லாத நிலைமையில் இருக் கின்றன. எனவே இந்த மாவட்டங்களில் இந்தத் தொழிலைத் துவங்கு வதற்கு அரசாங்கம் முன்வருமா ? அதற்கான வேலைகளைத் தொடங்க அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தருவாரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : நெல்லை மாவட்டத்தில்தான் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்கான இயந்திரங்கள்கூட பம்பாய் கதர், கிராமக் கைத்தொழில் ஆணைக் குழுவிடமிருந்து பெறப்பட்டிருக்கின்றன. ஆனால் இதில் உள்ள சங் கடம் என்னவென்றால் இப்போதுள்ள கரும்பு-சர்க்கரை விலைக்கும் இந்தப் பனஞ்சர்க்கரை விலைக்குமிடையே நிறைய வித்தியாசம் இருக் கிறது. இந்த விலையேற்றத்தின் காரணமாக இந்தத் தொழிலில் மிகுந்த நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை ஈடுகட்ட இந்தியக் கதர், கிராமக் கைத்தொழில் ஆணைக்குழு சப்சிடி — உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தோம். ஆனால் அந்தத் திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். ஆகவே இந்த விலைக்கு மிகுதியாக சர்க்கரை உற்பத்தி செய்யும் சந்தர்ப்பத்தில் பனஞ் சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைபற்றி மறு ஆய்வு செய்ய வேண்டிய நிலை உள்ளது. அது நஷ்டத்தில் செயல்பட வேண்டியிருக் கிறது என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது.

Eradication of begging

*40. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether measures are now being adopted by the Government for the eradication of open begging in streets, bazaars and other public places ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) whether there is any proposal for taking new and more effective steps in this direction ?

பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தெருக்கள், கடைவீதிகள், மற்றும் பிற பொது இடங்களில் பிச்சையெடுப்பதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு தற் போது மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) இது குறித்து இன்னும் செம்மையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயல்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. வேழவேந்தன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1945-ஆம் ஆண்டு பிச்சையெடுப்பதைத் தடுக்கும் சட்டம் பிச்சை எடுத்தலை ஒழிக்க வகை செய்கிறது. பிச்சை எடுக்கும் எவரும் இச்சட்டத்தின் கீழ் தண்டனை பெறத்தக்கவர் ஆவர். காவலரால் பிடிக்கப்படும் பிச்சைக்காரர்கள் சென்னை மாநகரிலும், மாவட்டத்திலுள்ள காப்பு முகாம்கள் (Care Camps) காப்பில்லங்கள் (Care Homes) இவற்றில் சேர்க்கப்படுகின்றனர்.

(உ) மதிப்பீட்டுக் குழு இம்மாநிலத்திலுள்ள பிச்சைக்காரர்கள் தொல்லையினால் ஏற்பட்டுள்ள பிரச்னைக்கு மேலும், சிறந்த முறையில் தீர்வு காணுவதற்காகப் பரிந்துரைகள் அளித்துள்ளது. அவை பரிசீலனையிலிருந்து வருகின்றன.

திரு. வி. தங்கபாண்டியன்: பிச்சையெடுக்கும் தொழில் தற்காலத்தில் வருமானமுள்ள ஒரு தொழில் என்ற கருத்தில் ஏராளமானவர்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதில் பொருள் ஈட்டியிருக்கிறார்கள். அந்தத் தொழிலில் கிராம மக்கள் அதிகமாக ஈடுபட்டிருப்பதால், இதைத் தவிர்ப்பதற்கு கிராமங்களில் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். இல்லையென்றால் இந்தத் தொழில் நீடித்துக் கொண்டுதான் இருக்கும். அதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. வேழவேந்தன் : வருவாய் வருகிற தொழில் என்று சொன்னாலும், அப்படிப் பிச்சை எடுக்கிறவர்களுக்கு சட்டப்படி ரூ. 50 அபராதம் விதிக்கப்படுகிறது. அதைக் கட்டத் தவறினால் 'Care Camp' என்ற இந்த விடுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

THIRU D. SANTOSHAM : Mr. Deputy Chairman, Sir, the Prevention of Begging Act is very comprehensive and all-pervasive. As one who is going to the criminal courts everyday, I can assure the Hon. Minister that I have not come across a single case under that Act. That Act provides that beggars who are brought before the Court should be sent to work-houses. I would like to know how many work-houses are actually functioning and how many work-houses have actually such beggars sent to them ? Has the Hon. Minister got any actual statistics and if, as I say, no action has so far been taken, will he at least give instructions that this Act should be immediately enforced in at least all the big towns of our State ? 4-50 p.m.

மாண்புமிகு திரு. கே. வேழவேந்தன் : எப்படியும் இந்தப் பிச்சைக்காரர்கள் தொல்லையை நீக்க வேண்டுமென்பதற்காகத்தான் நடவடிக்கைகள் இந்த அரசு எடுத்துவருகிறது. ஒவ்வொரு நகராட்சியும் விரும்பினால், இப்படி ஒரு விடுதியை நடத்தலாம் என்றும், அப்படி நடத்தினால் ஒவ்வொரு பிச்சைக்காரருக்கும் மாதம் ரூ. 15 அரசாங்க மானியம் கிடைக்கும் என்றும் விதிகள் இருக்கின்றன. பல நகராட்சிகள் அப்படி நடத்த முன்வருவதில்லை. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு போலீஸ் இலாகாவில் நடத்தப்படும் விடுதிகள் முறையாக

நடக்கின்றன. சென்னைக்குப் பக்கத்தில் உள்ள மேல்பாக்கத்தில் சில நூறு பிச்சைக்காரர்களை வைத்துக்கொண்டு விடுதி நடத்தப்படுகிறது. உறுப்பினர்கள் கூட சென்று பார்க்கலாம். அதை மேற்கொண்டு எப்படிச் சீர்திருத்தி அமைக்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டி ஆலோசித்தார். விரைவில் இதற்கு வேண்டிய வழிவகை காண்பதற்குப் பரிசீலனை செய்து வருகிறார்கள்.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, பிச்சை யெடுக்கும் பிச்சைக்காரர்களைப் பிடித்து ரூ. 50 அபராதம் போடப் படுவதாகச் சொன்னார்கள். அந்த ரூ. 50 சம்பாதிக்கும் வரையிலாவது அவர்கள் பிச்சை எடுக்க அனுமதிக்கப்படுவார்களா ?

திரு. எம். ராஜா அய்யர் : பிச்சை எடுப்பது லாபகரமான தொழில் என்று கூறப்பட்டது. அரசாங்கப் புள்ளிவிவரத்தில் இந்தப் பிச்சைக் காரர்கள் 'employed' என்று குறிக்கப் பட்டிருக்கிறார்களா அல்லது 'unemployed' என்று குறிக்கப்பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. வேழவேந்தன் : உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியைப்போல வெளியே வேலையில்லாமல் பிச்சையெடுக்கிறவர் களுக்கு வேலை வாய்ப்பு தரும் வகையில்தான் அந்த விடுதிகள் நடத்தப் படுகின்றன. கயிறு திரித்தல், மண்பாண்டங்கள் புனைதல் போன்ற வேலை கள் நடக்கின்றன. அதில் என்ன ஆச்சர்யம் என்றால், அந்தத் தொழில் கள் லாபகரமாக நடைபெறுகின்றன. அவற்றை விரிவு படுத்தவேண்டு மென்ற எண்ணம் அரசிற்கு இருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, the national conscience has been stirred by a television picture that is being shown in London today about the diseased and crippled beggars begging in front of the most sacred houses in our country, namely, temples, churches and mosques. May I know, Sir, whether there is any proposal in this Government at least to tackle the problem of crippled beggars and those afflicted with leprosy and other contagious diseases on a serious footing instead of getting unnecessarily excited over television pictures which depict the actual conditions of life in India today ?

மாண்புமிகு திரு. கே. வேழவேந்தன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டிருக்கிற உணர்வை இந்த அரசாங்கம் கொண்டிருக் கிற காரணத்தால்தான் நிதி நெருக்கடி உள்ள நேரத்தில்கூட நான் காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தண்டையார்பேட்டையில் ரூ. பத்து லட்சத்தி ஐம்பதினாயிரம் ரூபாய் செலவில் Rehabilitation Centre மறுவாழ்வு நிலையம் தொடங்குவதற்கு அனுமதி வழங்கி அதற்கான வேலைகளைச் செய்ய இந்த அரசு தொடங்கியிருக்கிறது. இந்த மாதிரி மற்றப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு விரும்பி யிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, whether a concerted attempt would be made at least to prevent these diseased beggars from crowding around the entrance to temple steps which we find in many areas of our State ?

28th August 1970]

மாண்புமிகு திரு. சே. வேழவேந்தன் : முக்கியமாக இந்த மறுவாழ்வு நிலையம் ஏறக்குறைய 750 தொழுநோய் பற்றியிருக்கிற பிச்சைக்காரர் களுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பின்னால் விரிவுபடுத்தவும் செய்யலாம்.

DEPUTY CHAIRMAN : Questions are over.

(*Note*:—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

II. COMPLAINT *Re* OBSTRUCTION CAUSED BY THE POLICE TO A MEMBER OF THE LEGISLATIVE COUNCIL ATTENDING THE MEETING OF THE COUNCIL.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பகல் சுமார் 1.30 மணிக்கு இங்கே சட்டசபைக் கூட்டத்திற்கு வந்து பணி செய்கிற முறையில் வந்து கொண்டிருக்கிற போது, இரும்புப் பாலத்தின் பக்கத்தில் நான் வந்துகொண்டிருந்த டாக்சியைப் போலீசார் நிறுத்திவிட்டார்கள். அவ்வாறு நிறுத்திவிட்டு, ''இந்தப் பக்கமாகப் போகக் கூடாது'', என்று சொன்னார்கள். உடனே நான் சொன்னேன் ''நான் ஒரு சட்ட சபை உறுப்பினர். அந்தப் பணிக்காகச் சென்று கொண்டிருக்கிறேன்'' என்று அவர்களிடம் சொன் னேன். அவர்கள் ஒன்றும் என்னை மரியாதைக் குறைவாக நடத்த வில்லை. அப்படிக் குற்றம் சாட்ட விரும்பவில்லை. ''இந்தப் பக்கமாகப் போவதற்கு அனுமதிப்பதில்லை, நீங்கள் திரும்பிச் சென்று மவுண்ட் ரோடு வழியாகத்தான் போக வேண்டும்'', என்றுதடை செய்துவிட்டார் கள். இம்மாதிரியாகச் சபை உறுப்பினர்கள் தங்கள் கடமையைச் செய்ய வரும்போது அவர்களுக்கு உள்ள உரிமை பறிக்கப்படுவதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து இத்தகைய நிலைமைகள் இனி ஏற்படாத வாறு நம்முடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இன்று பிற்பகல் ஹரிஜன நலத் துறை அமைச்சரைச் சந்திப்பதற்காக வந்த மாணவர் கூட்டத்தினர் அந்த இடத்திலே நிறுத்தப்பட்டிருந்தார்கள். அவர் களுடைய பிரதிநிதிகள் சில பேர் ஹரிஜன நலத் துறை அமைச்சரைச் சந்திப்பதற்காக உள்ளே வந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர் களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிப்பதாகவும், அது பற்றி சிந்தித்து முடிவு எடுப்பதாகவும் ஹரிஜன நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாணவர்களுடைய பிரதிநிதிகளுக்குச் சொல்லியும்கூட, அந்த மாணவர்கள் அந்த இடத்திலே நின்று கொண்டு ஆர்பாட்டங்களிலே ஈடுபட்டார்கள். அப்படி ஆர்பாட்டங்களிலே ஈடுபட்ட நேரத்தில் அந்த வழியாக வருகின்ற கார்கள் அவர்களுடைய கவனத்தைத் திருப்பத் தக்க வகையிலே அமைந்தன. ஆகவேதான் போலீஸ் அதிகாரிகள் நம்முடைய மாண்புமிக்க உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள்